## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-9 - சூழ் விசும்பு[1]
## (பரஜ்ஞானத்தைப் பெற்ற ஆழ்வார் எம்பெருமானால் அர்ச்சிராதிகதியைக் காட்டப் பெற்று, திருநாட்டுக்குச் சென்று அடியாரோடு சேர்ந்தமையை மயர்வற்ற மதிநலத்தால் கண்டு அருளிச் செய்தல்)

3755 * சூழ் விசும்பு அணிமுகில் * தூரியம் முழக்கின *
ஆழ் கடல் அலை திரை * கை எடுத்தாடின **
ஏழ் பொழிலும் * வளம் ஏந்திய என் அப்பன் *
வாழ் புகழ் நாரணன் * தமரைக் கண்டுகந்தே 1

3755 நாரணன் தமரைக் கண்டுகந்து * நன்னீர் முகில் *
பூரண பொற்குடம் * பூரித்தது உயர் விண்ணில் **
நீரணி கடல்கள் * நின்றார்த்தன * நெடு வரைத்
தோரணம் நிரைத்து * எங்கும் தொழுதனர் உலகே 2

3755 தொழுதனர் உலகர்கள் * தூப நல் மலர் மழை
பொழிவனர் * பூமி அன்றளந்தவன் தமர் முன்னே **
எழுமின் என்று இரு மருங்கிசைத்தனர் * முனிவர்கள் *
வழி இது வைகுந்தர்க்கென்று * வந்தெதிரே 3

3755 எதிரெதிர் இமையவர் * இருப்பிடம் வகுத்தனர் *
கதிரவர் அவரவர் * கைநிரை காட்டினர் **
அதிர் குரல் முரசங்கள் * அலை கடல் முழக்கொத்த *
மது விரி துழாய் முடி * மாதவன் தமர்க்கே 4

3755 மாதவன் தமர் என்று * வாசலில் வானவர் *
போதுமின் எமதிடம் * புகுதுக என்றலும் **
கீதங்கள் பாடினர் * கின்னரர் கெருடர்கள் *
வேத நல் வாயவர் * வேள்வியுள் மடுத்தே 5

3755 வேள்வியுள் மடுத்தலும் * விரை கமழ் நறும் புகை *
காளங்கள் வலம்புரி * கலந்தெங்கும் இசைத்தனர் **
ஆண்மின்கள் வானகம் * ஆழியான் தமர் என்று *
வாளொண் கண் மடந்தையர் * வாழ்த்தினர் மகிழ்ந்தே 6

3755 மடந்தையர் வாழ்த்தலும் * மருதரும் வசுக்களும் *
தொடர்ந்தெங்கும் * தோத்திரம் சொல்லினர் * தொடு கடல்
கிடந்த என் கேசவன் * கிளரொளி மணிமுடி *
குடந்தை என் கோவலன் * குடி அடியார்க்கே 7

[1] இது கோவில் திருவாய்மொழி

3755 குடி அடியார் இவர் * கோவிந்தன் தனக்கென்று *
முடியுடை வானவர் * முறை முறை எதிர் கொள்ள **
கொடி அணி நெடு மதிள் * கோபுரம் குறுகினர் *
வடிவுடை மாதவன் * வைகுந்தம் புகவே 8

3755 வைகுந்தம் புகுதலும் * வாசலில் வானவர் *
வைகுந்தன் தமர் எமர் * எமதிடம் புகுதென்று **
வைகுந்தத்து அமரரும் * முனிவரும் வியந்தனர் *
வைகுந்தம் புகுவது * மண்ணவர் விதியே 9

3755 விதி வகை புகுந்தனர் என்று * நல் வேதியர் *
பதியினில் பாங்கினில் * பாதங்கள் கழுவினர் **
நிதியுநற் சுண்ணமும் * நிறை குட விளக்கமும் *
மதி முக மடந்தையர் * ஏந்தினர் வந்தே 10

3755 * வந்தவர் எதிர் கொள்ள * மாமணி மண்டபத்து *
அந்தமில் பேரின்பத்து * அடியரோடு இருந்தமை **
கொந்தலர் பொழில் * குருகூர்ச் சடகோபன் * சொல்
சந்தங்கள் ஆயிரத்து * இவை வல்லார் முனிவரே 11

**அடிவரவு:** சூழ் நாரணன் தொழுதனர் எதிர் மாதவன் வேள்வி மடந்தை
குடி வைகுந்தம் விதி வந்து முனி